12th December 1961]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Having heard this complaint only, it was referred back to the Commissioner. I think the Commissioner has done his level best to see that such mistakes do not happen. I cannot say just now to whom these houses have been allotted.

SRI V. K. KOTHANDARAMAN : இதிலே அமைச்சர்களுக்கோ, அமைச்சர்களைச் சேர்ந்த உறவினர்களுக்கோ, ஏற்கனவே வீடு இருந்தவர்களுக்கு அலாட்மெண்ட் செய்யப்பட்டதா ?

DEPUTY SPEAKER : I am not going to allow this question.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

Kisan agitation

*2241 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் செப்டம்பர் மாதத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

(இ) எத்தனை பேர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது ?

(உ) எத்தனை பேர்கள் விடுதலை செய்யப்பட்டனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 12,322.

(*b*) 11,380. (As on 31st October 1961).

(*c*) As on 31st October 1961 sixteen persons were acquitted. By the end of November 1961, more than 5,800 persons had been released on their tendering apologies.

SRI S. M. ANNAMALAI : ஸார், இப்போது சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்யும் நோக்கம் ஏதாவது உண்டா ? அவர்கள் அமைதியான முறையில் மறியல் செய்தார்களே. ஒரு கொள்கைக்காக மறியல் செய்ததால் அவர்களை அரசியல் கைதிகளாகக் கருதி அவர்களை விடுதலை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் சட்டப்படி குற்றம் செய்தார்கள். ஆகவே விசாரணை நடத்தப்பட்டு கோர்ட்டார் தண்டனை கொடுத்தார்கள். தண்டனைக்காலம் முடிந்த பிறகு விடுதலை செய்யப்படுவார்கள்.

Improvement of roads (Madras City)

*2242 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

Out of the total amount of loans and grant sanctioned for the Corporation of Madras City for the improvement of roads during the current year, the amount utilized up to 1st August 1961?